
# இழந்துபோனதைத் தேடவும்

**இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார். (லூக்கா 19:10)**




மேற்க்காண்கிற இவ்வசனம், ஆண்டவராலேயே ஆயக்காரனாகிய சகேயுவின் வீட்டில் தங்கியிருக்கும் பொழுது கூறப்பட்டது. இங்கு முக்கியமாக, நாம் கவனிக்க வேண்டியது **இழந்துபோனதை** என்ற வார்த்தையாகும். ஆம், முன்னர் அது ஆண்டவருக்கு உரியதாய்தான் இருந்தது. ஆனால் இடையில் மனிதனின் பாவத்தினால், அவனே ஆண்டவரை விட்டு தூரம் போய், தொலைந்து போனான். ஆண்டவரை மறந்தும் போனான். ஆதாம் ஏவாள் முதல், பூமியில் உள்ள ஒவ்வொரு ஜீவராசியும் ஆண்டவரின் படைப்பே. வேதம் கூறுகிறது, **“சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது;“** (ரோமர் 11:36). ஆம் சிருஷ்டி கர்த்தாவாகிய அவருக்கே சகலமும் உரியது. ஆனால் மந்தையை விட்டு பிரிந்து, தொலைந்து போன நிலையில் மனிதன்

உள்ளான். பாவம், சாபம், மரணம் ஆகியவை இல்லாதவனாகத்தான் ஆண்டவர் மனிதனை சிருஷ்டித்தார். ஆனால் மனிதன் தனது தவற்றின் மூலம் இவற்றை உடையவனானான். தேவனுடைய அனாதித் திட்டத்தில் (முந்தின நித்தியம் - ஆதியாகமம், பிந்தின நித்தியம் - வெளிப்படுத்தின விசேஷம்) இவை இல்லை. இந்த பாவ, சாப, மரணத்திலிருந்து மனுக்குலத்தை மீட்டெடுக்கவே அவர்தம் ஜீவனை தந்தார். இழந்து போன அனைத்தையும் திருப்பிக் கொள்ளவே அவர் விரும்புகிறார். அதற்காகவே இழந்து போனவைகளை, காணாமல் போனவைகளை, அவரே தேடி வந்தார். ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தருமாகிய அவர் தாமே, மனிதனைத் தேடி வந்தார்.

வேதம் தெளிவாக கூறுகிறது **"அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக்குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப்பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." (லூக்கா 15:7)**. என்று. **"இயேசு அதைக் கேட்டு: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன் என்றார்." (மாற்கு 2:17)** என்று. ஆம் பாவத்தில் மூழ்கியிருக்கும் மனுக்குலம் அவரை தேடவில்லை, அறியவில்லை. சிலர் கல்லும் மண்ணும் தங்களை காக்கும் என்று அதை தெய்வமாக்கினர். பலர் பாவம், சாபம், மரணம், நித்திய வாழ்வு என்பதை பற்றிய உணர்வு அற்றவர்களாக உள்ளனர். எனவே காணாமல் போன ஒரு ஆட்டை, காணாமல் போன ஒரு வெள்ளி காசை, தேடித் திரிவது போல் ஆண்டவர் ஒவ்வொருவரையும் தேடி வருகிறார். ஒவ்வொரு தனி மனித இரட்சிப்பையும் குறித்து ஆண்டவர் கரிசனையுள்ளவராய் இருக்கிறார். பூமியின் இந்த நொடி வரை, மனுக்குலத்திற்கு வாய்ப்பு கொடுத்து, அவர்கள் கண்டுபிடிக்கப்பட (இரட்சிக்கப்பட) பொறுமையாய் கிரியை செய்கிறார்.

நாம் இங்கு **லூக்கா 19ஆம்** அதிகாரத்தில், சகேயு, சகமனிதரால் கூட, ஆயக்காரனாய் இருந்தபடியால், பாவியான மனுஷன் என்று அழைக்கப்பட்டான் **(லூக்கா 19:7)**. அப்படிப்பட்டவனை பார்த்து, **"இயேசு அந்த இடத்தில் வந்தபோது, அண்ணாந்து பார்த்து, அவனைக் கண்டு: சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்றார்." (லூக்கா 19:5)**, என்று ஆண்டவரே அவனைத் தேடிப் போவது, மனிதராகிய நம்மால் புரிந்து கொள்ள முடியாத ஒன்றாகும். மகா பரிசுத்தமுள்ள ஆண்டவர், பாவியாகிய மனிதனை தானாகவே

தேடிச்சென்று அவன் தன்னுடையவனாக வேண்டும் என்று முயல்வது ஆச்சரியமான ஒன்றாகும். ஆம் **"அதைக் கண்ட யாவரும்: இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார் என்று முறுமுறுத்தார்கள்." (லூக்கா 19:7).** ஆனால் சகேயுவோ, **"சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான்." (லூக்கா 19:8).** இங்கு சகேயு தன்னுடைய பாவத்தை உணர்ந்து கொண்டான். அதை சரி செய்ய என்ன செய்ய வேண்டும் என்பதையும் உணர்ந்து, அதை அறிக்கையிடுகிறான்.

அப்பொழுது ஆண்டவராகிய, **"இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே. " (லூக்கா 19:9)** என்றார். ஆம் பாவியான மனுஷனிடத்தில் தங்க போனார் என்று முறுமுறுத்தவர்கள்தான், தாங்களும் பாவிகளே என்ற உணர்வை அற்றவர்களாய் உள்ளனர். **லூக்கா 19:3,4 வசனங்களில்** சகேயு **"இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான். அவன் குள்ளனானபடியால், ஜனக்கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல், அவர் போகும் வழியில் முன்னாக ஓடி, அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான்."**. ஆம், அவன் உள்ளத்தின் வாஞ்சையை அவர் அறிந்தார். தாமே தேடிவந்து மீட்டார். சமாரிய ஸ்திரீ ஆனாலும் சரி, பாவியாகிய ஸ்திரீ ஆனாலும் சரி, ஏழு பிசாசுகள் பிடித்திருந்த மகதலேனா மரியாள் ஆனாலும் சரி, விபச்சாரத்தில் கையும் மெய்யுமாய் பிடிக்கப்பட்ட ஸ்திரீ ஆனாலும் சரி, சிலுவையில் ஆண்டவருடனே கூட அறியப்பட்ட கள்ளன் ஆனாலும் சரி, யாரானாலும் எப்படிப்பட்ட சூழ்நிலையானாலும், அவர்களை தேடி வந்த இரட்சித்தவர் நம் ஆண்டவர் ஒருவரே. ஆம் நாம் செய்யவேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான், அவர் நம்மை தேடி வந்தார், நம்மை இரட்சிக்க வந்தார் என்பதை மாத்திரம் விசுவாசித்து, அதற்கு கீழ்படிந்து, இனி பாவம் செய்யாதே, என்னை விட்டு தூரம் போகாதே என்று ஆண்டவர் தரும் எச்சரிப்பை பெற்று, ஆண்டவர் கொடுத்த இரட்சிப்பை இழந்து போகாமல் அதை காத்துக் கொண்டு, நித்திய ஜீவனை, புதிய எருசலேமாகிய பரலோக வாழ்வை பெற்றுக் கொள்வதே, நம் ஒவ்வொருவர் பற்றியும் ஆண்டவருடைய திட்டமாகும். எனவே தான் வேதம் கூறுகிறது, **"நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. " (1 யோவான் 4:10).** இப்படிப்பட்ட அன்பை, கிருபையை

தயவை பற்றி கொண்டவர்களை பற்றி (சகேயு, சமாரிய ஸ்திரீ, சிலுவையில் அறையப்பட்ட கள்ளன்) நாம் **கிருபையைப் பற்றிக் கொண்டவர்கள் - பாகம் 1 முதல் 4 வரை** உள்ள தியானங்களில் தியானத்துள்ளோம். தயவு கூர்ந்து அவற்றை தியானிக்கவும். இவ்வாறாக தொலைந்து போன நம்மை தேடி வந்து இரட்சித்த, ஆண்டவரை தாமே நாம் உறுதியாக பற்றி கொள்வோமாக. அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவது போல், **"கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக் கிறோமே." (ரோமர் 8:36,37)** என்ற தீர்மானத்தோடு, விசுவாசத்தோடு, அவரையே சார்ந்து வாழ்வோமாக. நம்மை தேடி வந்த அவர், அவரோடு என்றென்றும் இருக்க நம்மை சேர்த்துக் கொள்ளவும் வருகிறார், ஆயத்தமாய் காத்திருப்போம். ஆமென், அல்லேலுயா.